DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 194/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 4** |
| Name | : | **கருணன்** |
| Father's Name | : | **சீமைச்சாமி** |
| Village | : | **ஏ.விளாக்குளம்** |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **42/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02.07.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஏ.விளாக்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனக்கு உறவினர் ஆவார். புகார்தாரரையும் தெரியும் அவரும் உறவினர் ஆவார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் விசாரணையின் போதும் எனக்கு தெரியாது என்று தான் சொன்னேன்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

WEBCOPY

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 14.11.2020 ம் தேதி சுமார் 3.30 மணியளவில் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த புலிப்பாண்டி, கிருஷ்ணன், முனியசாமி ஆகியோர் மானாமதுரை தாயமங்கலம் ரோட்டில் உள்ள M.B. மஹால் முன்பு உள்ள பஞ்சவள்ளி பெட்டிக்கடை அருகே நின்றுகொண்டிருந்தபோது ராஜேந்திரன் மகன் முனியசாமி மற்றும் அஜய்குமார் என்பவரும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஆனந்தகுமார் அஜய் என்பவரை பார்த்து ஏன்டா தேவடியா புண்டை மகனே, அவுசாரி மகனே என்னை கொல்லத்தான்டா இங்கு வந்தேன் என்று பிச்சுவாக்கத்தியால் இத்தோடு செத்து தொலைடா என அஜய்யின் கழுத்தை நோக்கி குத்த போன போது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த முனியசாமி கையால் தடுத்ததில் அவருக்கு வலது பக்க மணிக்கட்டில் குத்தி ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் ஆனந்தகுமார் முனியசாமியை பார்த்து நீ என்னடா அவன காப்பாத்துற என சொல்லி முனியசாமியின் முதுகில் குத்தி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் காயம்பட்ட இரண்டு பேரும் அலறி சத்தம் போட அதை பார்த்த நானும் புலிப்பாண்டி, முனியசாமி ஆகியோர் சத்தம் போட்டுக்கொண்டு விரட்டி ஓடவும் ஆனந்தகுமார் தப்பியோடிவிட்டார் என்றும் காயம்பட்டவர்களை நாங்கள் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும்

WEB COPY

மேற்படி சம்பவம் குறித்து அஜய்யிடம் விசாரித்தபோது ஏற்கனவே தண்ணி அடித்தபோது பிரச்சினை இருந்ததாக சொன்னார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரி எங்கள் உறவினர் என்பதால் அவரை காப்பாற்றும் நோக்கில் எதிரிக்கு ஆதரவாக போலிசாரிடம் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

/Sd./S.Mohana Ramya,
**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**

WEB COPY